

பருத்தித்துறை. அல்வாயைப் பிறப்பிடமாகவும்
கல்லூரி வீதி. முரசுமோட்டையை வசிப்பிடமாகவும்
இல.100. யாழ் வீதி. வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர்.

# திருமதி.கணேசராசா ஸ்ரீபாரததேவி

அவர்களின் இறைபதபேறு குறித்த



# 31ம் நாள் நினைவு மலர்

## 29.04.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



பருத்தித்துறை, அல்வாயைப் பிறப்பிடமாகவும்
கல்லூரி வீதி, முரசுமோட்டையை வசிப்பிடமாகவும்
இல.100, யாழ் வீதி, வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர்.**

# திருமதி.கணேசராசா ஸ்ரீபாரததேவி

அவர்களின் சிவபதபேறு குறித்த

# நினைவு மலர்

## 29.04.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது குடும்பத்தலைவியாய்
எங்கள் வளமான வாழ்விற்கும்
பண்பால் பாசத்தால் பரிவால்
எம்மையெல்லாம் மெழுகு
வத்தியாக இருந்து தன்னை
உருக்கி எமக்கு ஒளியைத் தந்த
எம் உயிர்த் தெய்வத்தின்
பாத மலர்களில் எம் கண்ணீர்
பூக்களை காணிக்கையாக்கி
அஞ்சலி செலுத்துகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



பருத்தித்துறை, அல்வாயைப் பிறப்பிடமாகவும்
கல்லூரி வீதி, முரசுமோட்டையை வசிப்பிடமாகவும்
இல.100, யாழ் வீதி, வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்.

# திருமதி.கணேசராசா ஸ்ரீபாரததேவி

| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 07.01.1933 | 30.03.2022 |

அவர்களின்

## திதி நிர்ணய வெண்பா

வளம் கண்ட பிலவ வருஷ பங்குனித் திங்களில்
உளம் கொண்டு பூசிக்கும் அபரபக்க சதுர்த்தசி - களம்
காத்திட்ட மனையாள் சீர்மிகு (நுன்நாளில்)
ஸ்ரீபாரதாதேவி சிவன் பாதம் சேர்ந்தார் எனக் கொள்வீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ சிவமயம



# பஞ்சபுராணம்

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்
ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.
திருச்சிற்றம்பலம்

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினை சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக் கெனப்பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலாவொன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குண்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்ட னேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்கு சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னியணதில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தனர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்பு வேணடிபின்
வேண்டுகின்றார் பிறவாமை வேண்டும
மீண்டும் பிறப்புண்டேல்
உன்னையென்றும் மறவாமை வேண்டும்
இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்துபாடி அறவா நீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இடுக்கவென்றார்.

## திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசு முகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்த்த முகமொன்றே
குன்றுருகவேல் வங்கி நின்ற முகமொன்றே
மறுபடுசூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருள வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

### திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்க்கை வரலாறு

## அமரர். கணேசராசா ஸ்ரீ பாரததேவி அவர்களின்

ஈழத்திருநாட்டின் வடபால் யாழ்ப்பாணத்தில் வடமராய்ச்சியில் அல்வாய் எனும் பதி அமைந்துள்ளது. எல்லா வளங்களும் நிறைவாக உண்டு என்று மக்கள் அனைவரும் கூறத்தக்க வகையில் சிறப்புடன் அமைந்துள்ளது இவ்வூரில் இங்கு சீருடனும் சிறப்புடனும் வாழ்ந்து வந்த பழனிப்பிள்ளை ஞானரத்தினத்திற்கு இரண்டாவது மகளாக 1933.07.01 ஆம் நாள் ஸ்ரீ பாரததேவி என்ற நாமத்தோடு பூலோகம் வந்துதித்தார்.

இவருடைய உடன்பிறப்பு சகோதரர்களான அமரர்.ஸ்ரீதங்கராணி, அமரர்.ஸ்ரீஸ்கந்தராசா, அமரர். ஸ்ரீகிருஸ்ணராசா, அமரர்.ஸ்ரீஆனந்தராசா, ஸ்ரீபரமேஸ்வரிதேவி மற்றும் அமரர்.ஸ்ரீபுவனேஸ்வரிதேவி ஆவர்.

ஸ்ரீ பாரததேவி அவர்கள் தனது கல்வியை அல்வாய் மெதடிஸ் இந்துக் கல்லூரியில் கற்றார். இவர் கடவுள் பக்தி கொண்டவர். தினமும் ஆலயம் சென்று வழிபடுவது இவரது பழக்கமாக இருந்தது. யாருக்கும் ஏதாவது கொடுக்க வேண்டும் என்ற அவா கொண்டவர். அன்பும் அருளும் நிறைந்த ஸ்ரீ பாரததேவி முல்லைத்தீவைச் சேர்ந்த ஐயாத்துரை, அற்புதராணி தம்பதியினரின் மகன் கணேசராசாவை கரம்பிடித்தார். கணேசராசா, ஸ்ரீ பாரததேவி தம்பதியினரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இல்லறத்தின் பயனால் சரீரதேவி, சரசானந்ததேவி, விஜயகுமாரன், அமரர் விஸ்னுகுமாரன், சத்தியானந்ததேவி, ஸ்ரீஸ்கந்தகுமாரன், சாந்தினிதேவி, சிவஞானதேவி ஆகியோர்களை பிள்ளைகளாக பெற்றெடுத்தனர்.**

"இல் வாழ்வான் என்பான் இயல்புடைய மூலர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை"

என இவர்கள் வாழ்ந்தனர். இவர்கள் தமது ஆரம்ப வாழ்க்கையை அல்வாயில் வாழ்ந்து. 1955ம் ஆண்டின் பின் விவசாயம் செய்யும் நோக்கோடு வன்னிப் பெருநிலப்பரப்பா-கிய கிளிநொச்சிமுரசுமோட்டையில் குடியேறினர்.

ஸ்ரீ பாரததேவி அவர்கள் தனது குலத்தெய்வமாக அல்வாய் ஸ்ரீ முத்துமாரி அம்மனை தினந்தோறும் வழிபட்டு வந்து பின்பு முரசுமோட்டை சேற்றுக்கண்டி அம்மன் ஆலயம், முரசுமோட்டை சிவசுப்ரமணிய தேவஸ்தானம் மற்றும் பாலையடி பிள்ளையாரை தனது வழிபாட்டுத் தெய்வமாக வழிபட்டு வந்தார்.

பிற்காலப்பகுதியில் 1998ம் ஆண்டின் பின் வவுனியாவில் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் மற்றும் அயலவர்களுடன் சந்தோசமாக வாழ்ந்து கொண்டிருந்த வேளையில் 30.03.2022புதன்கிழமை இரவு 8.40 மணியளவில் இறைவனடி சேர்ந்தார். இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற்பாக்கள்

## சகோதரி புலம்பல்

எண்மராய் பிறந்து ஒன்றாய்
இன்பமாய் வாழ்ந்த நாங்கள்
அன்பெனும் ஓடம் தன்னில்
ஆசையாய் உலாவும் வந்தோம்
துன்பமே இல்லா வாழ்வு
சுதந்திரமாக வாழ்ந்தோம்
இன்று நீ இல்லா வாழ்வால்
ஏங்கியே தவிக்கின்றோம் நாம்

## மகன்மார்கள் புலம்பல்

அம்மாவே அம்மாவே எம் அருமை அம்மாவே அன்போடெம்மை பெற்று வளர்த்து நல் அறிவையும் ஊட்டி நின்றீரே எண்ணும் எழுத்தும் நாம் ஏற்றமுறக் கற்பித்து மண்ணதிலே எம்மை வளமாக வாழவைத்து மகிழ்ச்சியால் நாமெல்லாம் வாழ்ந்து நின்ற வேளையிலே கண் இமைக்கும் நேரமதில் காலன் உமைக் கவர கதியற்று நிற்கின்றோம் காலன் கொடியவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகள்மார்கள் புலம்பல்

அம்மா என்றழைக்க இனி எமக்கு யாருமில்லையம்மா
அம்மா என்று நாங்கள் அழைத்தால் உன்
உச்சி குளிருமம்மா, கட்டிலிலும் தொட்டிலிலும்
கால்மேலும் தோள்மேலும்
கட்டி அணைப்பியே அம்மா
நீ இல்லாத வாழ்வே எங்களுக்கு இருள்தானம்மா
இனி எப்போதம்மா பிள்ளை என்று கூப்பிடுவாய்?
இனி ஒருபோதும் உன் முகத்தை பார்க்க முடியாதம்மா
ஒரு முறையாவது உன் முகத்தையும் உன் குரலையும்
கேட்காது தவியாய் தவிக்கின்றோம் அம்மா
நீ வருவாயென உன் வரவுக்காக காத்திருக்கிறோமம்மா?

# மருமக்கள் புலம்பல்

மருமகளாய், மருமகனாய் எண்ணாமல்
மருமகளாய், மருமகனாய் எம்மையெல்லாம்
திருமகள், திருமகன் போல் வாழவைத்த
தெய்வமே உமை மறவோம்
அருந் தாயாய், எம்மவரை
ஆக்கி வைத்த அன்னையே
விருந்தாகி வானவர்க்கு இதை
விளம்பிடரே விரைந்து சென்றீர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

பெற்றெடுத்த பிள்ளைகளை வளத்தீர்கள்
பேரர் எமை பாசமுடன் அணைத்தீர்கள்
வற்றாத அன்போடு வருவீர்கள் என்றிருக்க
பெட்டியிலே வந்தீர்கள் வலுவிழந்து
முற்றாத பிஞ்சுகளாய் நாமிருக்க இங்கு
மூச்சடைத்து எங்குதான் சென்றீர்கள்
பொன்னான வாய்திறந்து கதை கூறி
பொன் வாழ்வு வழிகாட்டி நின்றீர்கள்
ஆசையுடன் நாமழைக்கும் அம்மம்மா
நேசமுடன் நாம் காணும் அப்பம்மா
நேரினிலே வாரீரோ பேசுவதற்கு நாம்

## பெறாமக்கள் புலம்பல்

இன்முகத்தால் வரவேற்று உபசரிக்கும் பெரியம்மா
உங்களுக்கா இந்த நிலை கேட்டவுடன் பதறினமே
அன்பொழுக பெறாமக்கள் எங்களை நீர் ஆதரித்தீர்
என்றும் எங்கள் நினைவினிலே உங்கள் நிழல் ஆடுமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூட்டப்பிள்ளைகள் புலம்பல்

பூட்டப் பிள்ளைகளை
பூவாய்ப் பார்த்தெம்மை
வாட்டமில்லாமல்
வடிவாய் வளர்த்தெடுத்தே
நாட்டுக்கு நல்லவராய்
நாளும் வளர்வதற்கே
ஊட்டம் மிக்க கதைகள்
ஓயாது சொல்லி எம்மை
நாளும் பார்த்தெடுத்த
நல்ல பூட்டியம்மா
கோளும் கெட்டதாலோ எம்
குணக்குன்றே போனீரா?

## உற்றார் உறவினர், நண்பர்கள், அயலவர்கள் புலம்பல்

அன்பாய் எமை அழைப்பாய்
ஆசையுடனே கதைப்பாய்
இன்பமாய் எந்நாளும்
எம்மோடு இருந்திடுவாய்
வன்பே அறியாத உன் உயிரைக்
காலனவன் வஞ்சகமாய் பறித்திட்டான்
வருந்துகிறோம் நாம் இங்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

முருகன் துணை

# கந்தர் சஷ்டி கவசம்

ஓம் சரவணபவ நம:
[ஸ்ரீ தேவராய சுவாமிகள் அருளிய]
கந்தர் சஷ்டி கவசம்

காப்பு

**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம், நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

குறள் வெண்பா

அமர இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்கு உதவும் செங்கதிர் வேலோன்,
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம்பாடக் கிண்கிணியாட,
மையல் நடனஞ்செயும் மயில் வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்க என்று வந்து
வரவர வேலாயுதனார் வருக,
வருக வருக மயிலோன் வருக,
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக,
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக,
ஆறுமுகம் படைத்த ஐயா வருக,
நீறிடும் வேலவன் நித்தம் வருக,
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக,
சரவண பவனார் சடுதியில் வருக,
ரஹண பவச, ரரரர ரரர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிஹண பவச, ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹ வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டு ஆயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடையுடன் சௌவும்
உய்யொளி சௌவும், உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும், கிளரொளி யையும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனிஒளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன் தினம் வருக,
ஆறு முகமும், அணிமுடி ஆறும்,
நீறிடு நெற்றியும், நீண்ட புருவமும்,
பன்னிரு கண்ணும், பவளச்செவ் வாயும்,
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்,
ஈரறு செவியில் இலகு குண்டலமும்,
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமும் தரித்து,
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்,
முப்புரி நூலும், முத்தணி மார்பும்
செப்ப ழகுடைய திருவயிறு உந்தியும்,
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்.
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும், இணைமுழந் தாளும்,
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு, டிகுகுண டிகுண
ரரரர ரரரர, ரரரர ரரர
ரிரிரி ரிரிரிரி, ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு, டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து, மயிலோன் விந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்து முந்து, முருகவேள் முந்து
எந்தனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும், வரமகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதன் என்று
உன்திரு வடியை, உறுதியென்று எண்ணும்
என்தலை வைத்து உன் இணையடி காக்க!
என்உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால், பாலனைக் காக்க
அடியேன் வதனம், அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்து இருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேர் இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழு பதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நல்துணையாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாபிக் கமலம், நல்வேல் காக்க
முப்பால் நாடியை, முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து, கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரை இருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில், சாமத்தில், எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல,
வல்ல பூதம், வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல்படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும், குறளைப் பேய்களும்,
பெண்ணைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட,
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்,
எல்லினும், இருட்டினும், எதிர்படும் மண்ணையும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்,
விட்டாங் காரரும், மிகுபல பேய்களும்,
தண்டியக் காரரும், சண்டா ளர்களும்,
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட,
ஆனை அடியினில் அரும்பா வைகளும்,
பூனை மயிரும், பிள்ளைகள் என்பும்,
நகமும் மயிரும், நீள்முடி மண்டையும்,
பாவைகள் உடனே, பல கலசத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும், ஒட்டியப் பாவையும்,
காசும் பணமும், காவுடன் சோறும்
ஓதும், அஞ்சனமும், ஒருவழிப் போக்கும்,
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட,
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட,
கால தூதாள் எனைக் கண்டால் கலங்கிட,
அஞ்சி நடுங்கிட, அரண்டு புரண்டிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்விட்டு அலறி, மதிகெட்டு ஓட,
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம், கதறிடக் கட்டு
கட்டி உருட்டு, கால்கை முறியக்
கட்டு கட்டு, கதறிடக் கட்டு,
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட,
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்,
பற்று பற்று பகலவன் தணல் எரி,
தணல்எரி தணல்எரி தணல்அது ஆக,
விடுவிடு வேலை வெருண்டது ஓட,
புலியும் நரியும், புன்நரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்,
தேளும் பாம்பும் செய்யான் பூரான்,
கடுவிட வி'ங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய வி'ங்கள் எளிதுடன் இறங்க,
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன், கைத்தாள் சிலந்தி,
பற்குத்து அரணை, பருவரை யாப்பும்,
எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்,
நில்லாதோட, நீ எனக்கு அருள்வாய்,
ஈரேழு உலகமும், எனக்கு உறவாக,
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா,
மண்ணாள் அரசரும், மகிழ்ந்து உறவாகவும்,
உன்னைத் துதிக்க, உன் திருநாமம்
சரவண பவனே! சைலொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவம்ஒளி பவனே!
அரிதிரு மருகா! அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்!
கந்தா! குகனே! கதிர் வேலவனே!
கார்த்திகை மைந்தா! கடம்பா! கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல், முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தணிகா சலனே! சங்கரன் புதல்வா!
கதிர்காத்து உறை, கதிர்வேல் முருகா!
பழனிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாழ், அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும், செங்கல்வ ராயா!
சமராபுரி வாழ், சண்முகத்து அரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என் நா இருக்க, யான் உனைப் பாட,
எனைத் தொடந்து இருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசம் ஆக,
ஆடினேன் நாடினேன், ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்,
பாச வினைகள் பற்றது நீங்கி,
உன்பதம் பெறவே, உன்அருள் ஆக
அன்புடன் இரட்சி, அன்னமும் சொன்னமும்
மொத்த மெத்தாக, வேலா யுதனார்,
சித்தி பெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க,
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க,
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க,
வாழ்க வாழ்க மலைக் குரு வாழ்க,
வாழ்க வாழ்க மலைக் குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்,
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க,
எத்தனை குறைகள், எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீ குரு, பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள், பெற்றவ ளாமே,
பிள்ளை யென்று அன்பாய்ப் பிரியம் அளித்து,
மைந்தன் என்மீது உன் மனமகிழ்ந்து அருளித்,
தஞ்சம் என்று அடியர் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்,
காலையில் மாலையில், கருத்துடன் நாளும்,
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி,
நேசமுடன் ஒரு நினைவது ஆகிக்,
கந்தர், சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்,
ஒருநாள் முப்பத் தாறு உருக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதியே செபித்து உகந்து நீறு அணிய,
அஷ்டதிக்கு உள்ளோர் அடங்கலும் வசமாய்த்,
திசைமன்னர் எண்மர், சேர்ந்தங்கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்,
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்எழில் பெறுவர்.
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்,
கந்தர் கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கு
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்,
நல்லோர் நினைவில் நடனம் புரியும்.
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்து என உள்ளம், அஷ்ட லட்சுமிகளில்
வீர லட்சுமிக்கு விருந்து ணவாகச்
சூர பத்மாவைத் துணித்தகை யதனால்.
இருபத் தேழ்வர்க்கு உவந்து அமுது அளித்த
குருபரன், பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி,
என்னைத் தடுத்து ஆட்கொள, என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி.
தேவர்கள் சேனா பதியே போற்றி.
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி,
இடும்பா யுதனே இடும்பா போற்றி,
கடம்பா போற்றி கந்தா போற்றி.
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கு ஓர் அரசே!
மயில்நடம் இடுவோய் மலரடி சரணம்.
சரணம் சரணம் சரவண பவஓம்,
சரணம் சரணம் சண்முகா சரணம்

கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று.
திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கௌரிகாப்பு

விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்
சொற்குற்றமொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றம் வராமற்காப்பாய்

காப்பு

காப்பெடுக்க வந்தவளே கௌரி அம்மாள் தாயாளே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெலாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக்கு உயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரெ காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளிதாயே
கொடிய மகிஷாசூரனைக் கூறு போட்டவளே
அசுரக்குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அன்று நீ நோன்பிருந்தாய
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும
அம்மா உமை அணைத்தே அருள்மாரி பொழிந்தாளே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாக் காட்டிடுவீர்
நெறியாத் திகைப்போருக்கு நெறிமுறையைக்
காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப்புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளுந் தேவியரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடுசெழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
விடுசெழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளையற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தூயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லவையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரெ
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவேர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி யணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தணச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌளரி அம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீறுமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழும்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி அணிவோர்க்கு
சித்தியெலாம் தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முக்திக்கு வழியுமுண்டு முக்கால முணர்வுமுண்டு
எச்சக்தி லோர்களெல்லா (ம்) ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி யெல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரி காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவா முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

கவனிப்பு: விரதங்களுக்குள் தலைசிறந்தது கேதாரகௌரி விரதமாகம் இதை அனுஷ்டிப்போர் இருபது நாட்களும் பூரண நம்பிக்கையுடன் விரதம் இருந்து அப்ாளை உளமுருகி வணங்கினால் நினைத்தது ஈடேறும் பயபக்தி இல்லாமல் அனு'டிப்பதால் பயன் இல்லை. இதையே

"நேரா நோன்பு சீராகாது"
என்று அருளிணார் ஔவைப்பிராட்டியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குமரகுருபரர் அருளிய
# சகலகலா வல்லி மாலை

திருச்சிற்றம்பலம்

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்க வென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
சகமேழு மளித்
துண்டா னுறங்க வொழிந்தான் பித்தாக
வுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பே
சகல கலா வல்லியே!

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கன தனக்
குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகலகலா வல்லியே!

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமுதார்ந்
துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ
வுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகலகலாவல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற்றுறை தோய்ந்த கல்வியுஞ்
சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வடநூற் கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகலகலாவல்லியே!

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற்பாத
பங்கேருகமென்
நெஞ்சத் தடத் தலராத தென்னே
நெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்
செந்நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகலகலாவல்லியே!

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழு தெளிதெய்த
நல்கா யெழுதாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்
வெங்காலு மன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய்

சகல கலா வல்லியே!
பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனு மென்பாற்
கூட்டும்படி நின் கடைக்கணல்கா
யுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந்
தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோ திமப்பேடே
சகல கலா வல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கன தனக்
குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகலகலா வல்லியே!

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமுதார்ந்
துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ
வுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகலகலாவல்லியே!

சகல கலா வல்லியே!
பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனு மென்பாற்
கூட்டும்படி நின் கடைக்கணல்கா
யுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந்
தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோ திமப்பேடே
சகல கலா வல்லியே!

சொல் விற்பனமு மவதானமுங்
கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையுந் தந்தடிமை கொள்வாய்
நளினா சனஞ் சேர்
செல்விக் கரிதென்றொரு காலமுஞ்
சிதையாமை நல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலா வல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலந்
தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன
நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலா வல்லியே!

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட
மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப
போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும்
விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலா வல்லியே!

பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கன தனக்
குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகலகலா வல்லியே!

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமுதார்ந்
துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ
வுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகலகலாவல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்கை அம்மன் பாடல்

வாழ்வு ஆனவள் துர்க்கா வாக்கு மானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தவள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயும் ஆனவள்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

உலகை யீன்றவள் துர்க்கா உமையு மானவள்
உண்மையானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நித்யை யானவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

செம்மையானவள் துர்க்கா செபமு மானவள்
அம்மையானவள் அன்புத் தந்தை யானவள்
இம்மையானவள் துர்க்கா இன்ப மானவள்
மும்மையானவள் என்றும் முழுமை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
உயிருமாவனள் துர்க்கா உடலுமானவள்

உலகமானவள் துர்க்கா எந்தன் உடமை யானவள்
பயிரு மானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னும் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்ப மற்றவள் துர்க்கா துரிய வாழ்பவள்
துறையு மானவள் இன்பத்தோணி யானவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபய வீடவள்
நன்மை தங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

குருவுமானவள் துர்க்கா குழந்தை யானவள்
குலமு மானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவு மானவள் துர்க்கா திருசூலி மாயவள்
திருநீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னைத் தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயே வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னைக் காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
கன்னி துர்க்கையே ,தயக் கமல துர்க்கையே

கருணை துர்க்கையே வீரக் கனக துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

(தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே என்ற நாமம் வரும்போது விரதம் இருப்பவர்கள் நமஸ்காரம் செய்வது மிகவும் நல்லது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகருக்குப் பிடித்தமான 21 வகை மலர்கள்

01. புன்னை
02. மந்தாரை
03. மகிழம்பூ
04. மாதிரி
05. தும்பைபூ
06. ஊமத்தம்பூ
07. சம்பங்கிபூ
08. மாம்பூ
09. தாழம்பூ
10. முல்லைப்பூ
11. கொன்றைப்பூ
12. எருக்கம்பூ
13. செங்கரு நீர்பூ
14. செவ்வரளி
15. வில்வம்
16. அரளி
17. குருந்தை
18. பவளமல்லி
19. ஜாதிமல்லி
20. மாதுளம்பூ
21. கண்டாங்கத்தரிப்பூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் வழியாட்டிற்கு அர்ச்சனை செய்ய வேண்டிய இலைகளும் அதன் மலர்களும்.

| | | |
|---|---|---|
| 01. | மாவிலை | - அறம் நீதி |
| 02. | கரிசலாங்கண்ணி | - இல்வாழ்க்கைக்குத் தேவையான பொருட்கள் |
| 03. | வில்வம் | - இன்பம் |
| 04. | அறுகம்புல் | - சகலவிதமான செளபாக்கியம் |
| 05. | இலத்தை | - கல்வி ஞானம் |
| 06. | ஊமத்தை | - பெருந்தன்மை |
| 07. | வன்னி | - இவ்வுலகில் வாழும் காலத்தில் நன்மை |
| 08. | நாயுருவி | - வசீகரம் |
| 09. | கட்டங்கத்தரி | - வீரம் |
| 10. | அரளி | - வெற்றி |
| 11. | அரசு | - பதவி, மதிப்பு |
| 12. | எருக்கு | - சந்தான விருத்தி |
| 13. | மருதம் | - மக்கட்பேறு |
| 14. | துளசி | - நுண்ணறிவு |
| 15. | தேவதாரு | - எதையும் தாங்கும் இதயம் |
| 16. | மரிக் கொழுந்து | - இல்லற சுகம் |
| 17. | ஜாதிமல்லி | - சொந்த வீடு |
| 18. | நெல்லி | - செல்வம், பூமி பாக்கியம் |
| 19. | மாதுளை | - நுண்ணறிவு |
| 20. | அகத்திக் கீரை | - கடன் தொல்லையிலிருந்து விடுதலை |
| 21. | தவனம் | - திருமணத்தடை நீங்கி நல்வாழ்க்கைத் துணை அடைதல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

1933 07 01



2022 03 30

பருத்தித்துறை அல்வாயை பிறப்பிடமாகவும் கல்லூரி வீதி முரசுமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்.

## கணேசராசா ஸ்ரீபாரததேவி

(தேவி)

அன்பின் உறைவிடமாய்
அனைவருக்கும் நிழல் மரமாய்
துன்பம் நீக்கும் அருமருந்தாய்
தூய வாழ்வு வாழ்ந்த **அம்மாவே!**
உங்களை இவ்வுலகம் ஏங்கியழ
அவ்வுலகம் செல்ல ஆசையுற்றது ஏனோ
பூவுலகில் பொன்னெழுத்தாய்
நின்று நிலைத்திருக்கும் இறைவன்
நிழலில் நீங்கள் இருப்பீர்கள்.

பிரிவால் துயருறும்

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

அன்னையின் மடியில்
07
01
1933



ஆண்டவன் அடியில்
30
03
2022

பருத்தித்துறை, அல்வாயைப் பிறப்பிடமாகவும்
கல்லூரி வீதி, முரசுமோட்டையை வசிப்பிடமாகவும்
இல.100, யாழ் வீதி, வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர்.

## கணேசராசா ஸ்ரீபாரததேவி

உதிர்ந்து போகும்வரை தெரியவில்லை
உங்கள் பாசம்
நீங்கள் பேசிய வார்த்தைகளை
கேட்டு வந்த
கேட்டு வாழ்ந்தோம்
சேர்ந்தவை என்று ஏங்குகிறது
மனம்
என்ன செய்ய...
எதையுமே திரும்ப முடியவில்லை
உங்களது வெற்றிடத்தில்
அம்மா
ஞானமாய் வாழ்ந்த உங்களை
வழியனுப்புகிறோம்
கண்ணீரோடு.

அன்னையின் ஆத்ம சாந்தியடைய
இறைவனை வேண்டுகிறோம்.

[illegible]

**சபரி வாசன் தீர்க்க யாத்திரைக்குழு**
வவுனியா.

தீபன் அச்சகம் வவுனியா. - 078 7707738



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

**" எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்**
**உய்வில்லை செய்நன்றி கொன்ற மகதற்கு"**

எமது குடும்பத் தலைவி அமரர் கணேசராசா ஸ்ரீ பாரததேவி அவர்கள் எமைபிரிந்து இறையடி சேர்ந்த செய்தி கேட்டு உடன் ஓடிவந்து துயரில் கலந்து பின் ஆறுதல் கூறி இறுதிக்கிரியைகளுக்கு பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும் உணவு அளித்தவர்களுக்கும் பிரசுரங்கள், பதாதைகள், மலர்வளையம் மற்றும் மலர்மாலை மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் தேவை அறிந்து செயற்பட்ட அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் ஆறுதல் வார்த்தைகள் கூறி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அன்னாரின் ஆத்ம ஈடேற்றத்திற்கான கிரியைகளை நடாத்திய அந்தண பெருந்தகைகளுக்கும் அந்தியேட்டி கிரியைகளிலும் 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய ஆத்ம சாந்தி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் அன்று தொடக்கம் இன்று வரை எம்முடன் நின்று எமக்கு பல வழிகளில் உதவி புரிந்தோருக்கும் அத்துடன் நினைவு மலரை அச்சிட்டு உதவிய தீபன் பதிப்பகத்தினருக்கும் எமது நன்றியறிதலை இதய பூர்வமாக வெளிப்படுத்துகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**- குடும்பத்தினர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள், அது வெறொருவருடையதாகும்.



'இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்"
பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

தீபன் அச்சகம்
076 7707736

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org